**MCOP NO:5517/2019 DATE: 13.08.2025**

எ.ம.சா : 2

பெயர் : செல்வி. விஜயலட்சுமி

த/பெ : திரு. குணசேகரன்

வயது : 44

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் 2-ம் எதிர்மனுதாரர் ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக கூடுதல் சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான், அதை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் எமசாஆ 8-ஐ தாக்கல் செய்கிறேன்.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது மனுவிலும், எனது முதல் பிரமாண பத்திரிக்கையில் முதல் எதிர்மனுதாரரின் வாகனம் இந்த விபத்தில் சம்பந்தப்படவில்லை என்பதை எங்களுடைய காப்பீட்டு நிறுவனத்தின் விசாரணை அதிகாரி கொடுத்த அறிக்கையின் பெயரில் தெரிந்து கொண்டோம் என்று காட்டப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். விசாரணை அதிகாரி கொடுத்த அறிக்கையுடன் எங்கள் நிறுவனம் விசாரித்து தான் மேற்படி வீதம் சொல்லியுள்ளோம். எங்கள் நிறுவனத்தினுடைய விசாரணை அதிகாரி தாக்கல் செய்த விசாரணை அறிக்கையை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை. அந்த அறிக்கையை தாக்கல் செய்தால்தான் அந்த விசாரணை அதிகாரி எதன் அடிப்படையில் அவர் அந்த முடிவுக்கு வந்தார் என்று தெரிய வரும் என்று சொன்னால் சரியல்ல. விசாரணை அறிக்கையானது எங்கள் நிறுவனத்திற்கு எதிராக இருப்பதால் தான் அதை நாங்கள் நீதிமன்றத்திற்கு தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. விபத்து எப்படி யாருடைய கவனக்குறைவால் ஏற்பட்டது என்பதும், எந்த வாகனத்தினால் ஏற்பட்டது என்பதும், அந்த ஓட்டுநருக்கு தான் தெரியும் என்றால் சரிதான். முதல் எதிர்மனுதாரருக்கு உண்டான ஆட்டோவின் பதிவு எண் TN 02 BL 5329 என்ற வாகனத்தை ஓட்டிய ஓட்டுநரின் அஜாக்கிரதையால் தான் விபத்து ஏற்பட்டதாக அவர் ஒப்புக்கொண்டு நீதிமன்றத்தில் ஆஜராகி மசாஆ 9-ன் மூலமாக அபராதம் செலுத்தி உள்ளார் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. முதல் பிரமாண வாக்குமூலத்தில் மனுதாரரும், காவல் துறையினரும் சேர்ந்து போலியாக முதல் எதிர்மனுதாரர் வாகனத்தை இந்த

வழக்கில் சேர்த்து விட்டோம் என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். எமசாஆ 8-ன்படியும், மனுதாரர், முதல் எதிர்மனுதாரர் மற்றும் காவல் துறையினரும் சேர்ந்து தான் முதலாம் எதிர்மனுதாரர் வாகனத்தை இந்த வழக்கில் சேர்த்து விட்டார் என்று காட்டி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். அது எமசாஆ 8 ஆகும் என்றால் சரிதான். முதல் பிரமாண பத்திரிக்கையில் சொல்லியுள்ள சங்கதிகளும், எமசா 8-ல் சொல்லியுள்ள சங்கதிகளும் முன்னுக்குபின் முரணமாக சொல்லியுள்ளதால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 23.04.2025 பிறகு மேற்படி விபத்து குறித்த வழக்கானது எந்த நிலையில் உள்ளது என்பதை ஆவணங்கள் மூலமாக நான் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். ஆனால், வழக்கு நிலுவையில் உள்ளது. முதல் எதிர்மனுதாரரே நீதிமன்றத்தில் ஆஜராகி விபத்தானது தன்னுடைய கவனக்குறைவால் ஏற்பட்டது என்று ஒப்புக்கொண்டும், தனது வாகனத்தினால் விபத்து ஏற்பட்டதாகவும் கூறி அபராதம் செலுத்தியுள்ளதால் விபத்தானது முதலாம் எதிர்மனுதாரரின் அஜாகிரதையால் ஏற்பட்டுள்ளது என்பதால் 2-ம் எதிர்மனுதாரராகிய நாங்கள் மனுதாரருக்கு இழப்பீடு கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல. விபத்து நடந்த 7 வருடங்கள் கழித்து முதல் எதிர்மனுதாரரின் மீது குற்ற பல்வகை மனு தாக்கல் செய்து உள்ளதால் நாங்கள் மனுதாரருக்க அபராதத்துடன் இழப்பீடு கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல. அந்த மனுவை நாங்கள் 2022-ம் வருடமே தாக்கல் செய்து விட்டோம்.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

x

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.